ஆப்கானிஸ்தான் அதிபரின் இந்திய பயணம், டிசம்பர் 12-15, 2013

டிசம்பர் 14, 2013

இந்திய அரசு விடுத்த அழைப்பினை ஏற்று, ஆப்கானிஸ்தான் இஸ்லாமிய குடிரசின் அதிபர் மேதகு ஹமீது கார்சாய், இந்தியாவிற்கு 2013 டிசம்பர் 12-15ந்தேதிகளில் சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ளார். தில்லியில் அவர் இந்திய குடியரசுத் தலைவர் மேதகு பிரணாப் முகர்ஜியையும், பிரதமர் டாக்டர் மன்மோகன் சிங்கையும் சந்தித்தார். வெளியுறவுத்துறை அமைச்சர் சல்மான் குர்ஷித் மற்றும் தேசிய பாதுகாப்பு ஆலோசகர் சிவசங்கர மேனன் ஆகியோர் ஆப்கானிஸ்தான் அதிபர் மேதகு ஹமீது கார்சாயை சந்தித்தனர்.

இரு தரப்பு பேச்சு வார்த்தைகளின் போது பிரதமர் டாக்டர் மன்மோகன் சிங், இந்தியா ஆப்கானிஸ்தான் இடையேயான நட்புறவு மிகவும் வலுவாகவும் விரிவானதாகவும் இருப்பதாகவும் மகிழ்ச்சி தெரிவித்தார்.

இரு நாடுகளுக்கும் இடையேயான உறவுகளிலும் குறிப்பாக தளத்தகை கூட்டாண்மை ஒப்பந்தத்தில் ஏற்பட்டுள்ள முன்னேற்றம் குறித்தும் இரு நாட்டுத் தலைவர்களும் மனநிறைவினை வெளியிட்டனர்.

அதிபர் கார்சாய் ஆப்கானிஸ்தானில் நிலவும் அரசியல், பாதுகாப்பு மற்றும் பொருளாதார நிலவரம் குறித்து பிரதமரிடம் விவரித்தார். குறிப்பாக நாட்டில் நிலவும் பாதுகாப்பு பரிமாற்றங்கள் குறித்தும், பிறநாடுகளுடன் ஆப்கானிஸ்தானின் உறவு குறித்தும் அவர் விவரித்தார். ஆப்கானிஸ்தானை வலுவான ஒருங்கிணைந்த, நிலையான, அமைதியான மற்றும் வளமான நாடாக ஆக்கும் மற்றும் பிராந்திய அமைதி மற்றும் வளமைக்கு பங்களிக்கும் ஆற்றல் ஆப்கானிஸ்தான் மக்கள் மற்றும் அரசிடம் இருப்பதாக இந்தியா நம்புவதாக பிரதமர் மன்மோகன் சிங், தெரிவித்தார். ஆப்கானிஸ்தானின் இந்த மாற்றத்தின் போதும், அதன் பின்னும் இந்தியாவின் ஆதரவு நீடிக்கும் என்று அவர் உறுதியளித்தார். பிராந்திய ஒத்துழைப்பை மேலும் பலப்படுத்த பணியாற்றுவதாகவும், பிராந்திய ஒருங்கிணைப்பு மற்றும் மேம்பாட்டு நோக்குடன் ஆசிய இதயம் நடைமுறை மூலமாக இணைந்து பணியாற்ற

இரு தலைவர்களும் சம்மதித்தனர். ஆசிய இதயம் கூட்டமைப்பின் மூத்த அதிகாரிகளின் கூட்டத்தை 2014 ஜனவரி 17ந்தேதி இந்தியா நடத்துகிறது.

ஆப்கானிஸ்தான் மற்றும் அமைதி மற்றும் பிராந்தியத்தில் பாதுகாப்பு போன்றவை தொடர்பான தங்கள் பகிர்ந்து கொள்ளப்பட்ட கனவுகளுக்கு ஏற்ப, பிரதமரும் ஆப்கானிஸ்தான் அதிபர் கார்சாயும் அனைத்து துறைகளிலும் தங்கள் கூட்டாண்மை ஒப்பந்தத்தின் அடிப்படையில் மேலும் தீவிரப்படுத்த தங்கள் உறுதிப்பாட்டினை உறுதி செய்தனர். இந்தியாவும் ஆப்கானிஸ்தானின் ஒட்டுமொத்த சமூக பொருளாதார வளர்ச்சிக்கு தொடர் ஆதரவு வழங்க இந்தியா தயாராக இருப்பதை பிரதமர் தெரிவித்தார். வாணிபத் தொடர்புகள், கல்வி உதவித்தொகைகள், இந்தியாவின் உதவியுடனான வளர்ச்சி மற்றும் மறு கட்டுமான திடடங்களை அமல்படுத்துதல் இதில் அடங்கும். இரு நாடுகளும் ஈரான் இஸ்லாமிய குடியரசுடன் இணைந்து பணியாற்றி, ஆப்கானிஸ்தான் வழியே புதிய வாணிப வழித்தடம் மற்றும் கடவுப்பாதையை மேம்படுத்தும் வகையில் பணியாற்ற சம்மதித்தனர்

இரு நாடுகளின் பாதுகாப்பு மற்றும் இராணவ ஒத்துழைப்புகளை ஆழப்படுத்த ஒப்புக்கொண்டனர். இதில், ஆப்கானிஸ்தான் பாதுகாப்பு படையினருக்கு தேவையான பயிற்சி, கருவிகள், மற்றும் கட்டமைப்புத் தேவைகளை வழங்குதல் போன்றவை மூலம் அதன் இயக்க ஆற்றலையும் இடப்பெயர்வு திறனையும் மேம்படுத்த முடியும். ஆப்கானிஸ்தான் இராணுவ அதிகாரிகளுக்கு உயர் இராணுவ கல்வியை வழங்க வாய்ப்புகளை விரிவு படுத்த இரு தலைவர்களும் ஒப்புக்கொண்டனர்.

ஆப்கானிஸ்தானில் உள்ள இந்திய தூதரகங்கள் மற்றும் ஊழியர்களுக்கு ஆப்கானிஸ்தன் அரசு பாதுகாப்பு வழங்குதற்காக ஆப்கானிஸ்தான் அதிபருக்கு பிரதமர் நன்றி தெரிவித்தார். 2013 ஆகஸ்ட் மாதம் ஜலாலாபாதில் இந்திய தூதரகத்தில் தற்கொலைப்படைத் தாக்குதலை ஆப்கானிஸ்தான் பாதுகாப்பு படைகள் முறியடித்ததற்காக தனது ஆழந்த நன்றியை பிரதமர் தெரிவித்தார். இரு நாட்டுத் தலைவர்களும் தங்கள் பிராந்தியத்தையும் தங்கள் நாட்டையும் பாதிப்பிற்குள்ளாக்கும் பயங்கரவாதம் மற்றும் தீவிரவாதத்தின் சக்திகளை

எதிர்கொள்ள சர்வதேச சமூகத்துடன் இணைந்து பணியாற்றத் தயாராக இருப்பதாக இருநாட்டுத் தலைவர்களும் தெரிவித்தனர்.

குடியரசுத் தலைவர் பிரணாப் முகர்ஜி, அதிபர் கார்சாய்க்கு தனிப்பட்ட முறையில் விருந்து அளித்தார். அப்போது இருவரும், பரஸ்பரம் நலன் விளைவிக்கும் இருதரப்பு, பிராந்திய மற்றும் சர்வதேச பிரச்சினைகள் குறித்து விவாதித்தனர். ஜரன்ஜ்-டெலாரம் நெடுஞ்சாலையை திறந்து வைக்க ஆப்கானிஸ்தானுக்கு விஜயம் செய்ததை குடியரசுத்தலைவர் நினைவு கூர்ந்தார். ஆப்கானிஸ்தானுக்கு வருகை புரியுமாறு குடியரசுத் தலைவருக்கு அதிபர் கார்சாய்  அழைப்பு விடுத்தார்.

அதிபர் கார்சாயுடன் உயர்மட்ட அளவிலான பிரதிநிதிகள், அந்நாட்டு வெளியுறவுத்துறை அமைச்சராக பொறுப்பு வகிக்கும் திரு ஜரார் அகமது ஓஸ்மானி, தேசிய பாதுகாப்பு ஆலோசகர் டாக்டர், ராங்கின் டாட்பார் ஸ்பான்டா, வாணிபம் மற்றும் தொழில்துறை அமைச்சராக பொறுப்பு வகிக்கும் திரு ஷாகேர் கார்கார் மற்றும் உயர் அதிகாரிகள் வருகை புரிந்தனர்.

புதுதில்லி

14 டிசம்பர், 2013